

# பழிவாங்கும் அரசியல்; நம்மீது பழிபோடும் அரசியல்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி!

மே 12. பத்தே நாட்களில், 25-ஆம் தேதி அன்று தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

அதனால்தான், நான் இன்னும் தெளிவாகச் சொல்கிறேன், இந்தக் சர்க்கஸ் கும்பல் நம் தயவில் ஆட்சி அமைத்தார்கள், ஆனால் அ.தி.மு.க. தயவில் இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த மதுராந்தகம் தொகுதியில் வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர் அடித்த பல்டியால்தான் இன்றைக்கு இந்த இடைத்தேர்தல் திணிக்கப்பட்டிருக்கிறது என்று நான் மீண்டும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தத் தொகுதி மக்களுக்கு அவர்கள் செய்த துரோகத்தை, நாம் ஒவ்வொருவரும் இந்தத் தொகுதி முழுவதும் ஒவ்வொரு வீடாக எடுத்துச் சென்று சொல்லவேண்டும், சென்று சேர்க்கவேண்டும். இந்தப் புதிய ஆட்சி அமைந்து, கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் ஆகின்றன. இந்த நான்கு மாதங்களில் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் எத்தனை வாக்குறுதிகளைக் கொடுத்தார்களே, ஏதேனும் ஒன்றைச் செய்திருக்கிறார்களா? உருப்படியாக ஏதேனும் ஒன்றைச் செய்தார்களா? அதையெல்லாம் இன்றைக்கு மக்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

### ஒரே நாளில் எட்டு படுகொலைகள்!

இன்றைக்குத் தமிழ்நாட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை. அதிலும் கொலை நடக்காத நாளே கிடையாது. நேற்று முன்தினம் மட்டும் பார்த்தால், தமிழ்நாட்டில் எட்டு படுகொலைகள் நடந்திருக்கின்றன. சட்டம் ஒழுங்கு இன்றைக்கு அந்த அளவிற்குச் சீரழிந்து போயிருக்கிறது. என்னவென்று கூறி ஆட்சிக்கு வந்தார்கள்? 'மாற்றம், மாற்றம்' என்று கூறி ஆட்சிக்கு வந்தார்களே, மாற்றத்தைக் கொடுத்தார்களா? மிகப்பெரிய ஓர் ஏமாற்றத்தை இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள்.

`பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுப்போம்' என்று வாய் கிழிய நிறைய பேசினார்களே, கொடுத்திருக்கிறார்களா? இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்துதான் பெண்களுக்குப் பாதுகாப்பு மிகவும் அவசியமாகிவிட்டது. இவை ஒவ்வொன்றையும் சட்டமன்றத்தில் நான் பெயர் குறிப்பிட்டு, யார் யார் மீது புகார், என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று பெயர் சொல்லிக் கேட்கிறேன். இதுவரைக்கும் எந்த ஒரு பதிலும் கிடையாது.

நேற்று மாலை முப்பெரும் விழாவில் நம் தலைவர் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்; பார்த்திருப்பீர்கள், கேட்டிருப்பீர்கள். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இங்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் என்ன சொன்னார்? அவருடைய பாணியிலேயே சொல்ல வேண்டும் என்றால், இரண்டு பேருக்குத்தான் போட்டி. இப்போது யார் அந்த இரண்டு பேருக்குப் போட்டி தெரியுமா? ஒன்று மின் வெட்டு, இன்னொன்று அரிவாள் வெட்டு.

இதை மக்களிடம் கொண்டுபோய்ச் சேருங்கள், மக்களிடம் போய் சொல்லுங்கள். அதுமட்டுமல்ல, விவசாயக் கடன் தள்ளுபடி, முழுக் கடன் தள்ளுபடி என்று சொன்னீர்களா இல்லையா? அதைச் செய்து கொடுத்தீர்களா? இல்லை. நம் திராவிட மாடல் அரசில் நம் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது தமிழ்நாடு ஒரு முழுமையான வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

இன்றைக்குத் தமிழ்நாடு கடந்த நான்கு மாதங்களாகப் பின்னோக்கிய திசையில் சென்றுகொண்டிருக்கிறது. விலைவாசி என்ன நிலைமை? இன்றைக்குப் பல மடங்கு உயர்ந்து போயிருக்கிறது. இந்த நான்கு மாதங்களில் இவர்கள் கொண்டுவந்த ஏதேனும் ஒரு திட்டத்தைப் பற்றி இவர்களால் சொல்ல முடியுமா? எதுவுமே கிடையாது, ஒரு திட்டத்தைக்கூடக் கொண்டுவரவில்லை.

இவர்கள் செய்த ஒரே வேலை என்ன தெரியுமா? ஆட்சிக்கு வந்தவுடனே நம் திட்டங்களை நிறுத்துவது அல்லது நாம் கொண்டுவந்த திட்டங்களின் மீது `ஸ்டிக்கர்' ஒட்டி, பெயரை மாற்றித் திட்டத்தை மாற்றுவது. அதை மட்டும் தான் இன்றைக்கு இந்த ஆட்சியாளர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நம் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டில் ஒரு `ரியல் ஆட்சி' நடந்தது; ஆனால் இன்றைக்கு ஒரு `ரீல்ஸ் ஆட்சி'யை இந்த முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், நம் மீது பழியைப் போட்டார்கள், இன்னும் அவர்கள் நம்பவில்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்ற நம்பிக்கை இன்னும் அவர்களுக்கே வரவில்லை. அதனால்தான் இன்றைக்கும் நம் மீது பழி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுதும் சட்டமன்றத்தில் ஏதேனும் எழுந்து கேள்வி கேட்டால், 'தி.மு.க. ஆட்சியில் இப்படி நடந்தது' என்று மீண்டும் மீண்டும் நம் மீது பொய்ப் பழியைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஒன்று பழிவாங்கும் அரசியல், இன்னொன்று நம் மீது பழியைப் போடும் அரசியல். என்ன கேள்வி கேட்டாலும் அதற்குத் திசைதிருப்பும் உத்தி. 107 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆளுங்கட்சியில். உண்மையைச் சொல்லட்டுமா? அதில் 10 பேரின் பெயர்கூட எங்களுக்குத் தெரியாது. எங்களை விடுங்கள், முதலமைச்சருக்கே தெரியாது. நான் சவால் விடுகிறேன், நீங்கள் 107 சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களைச் சொல்லத் தேவையில்லை, அமைச்சர்களின் பெயர்களைச் சொல்லுங்கள். எல்லா அமைச்சர்களின் பெயர்களைக்கூடச் சொல்லத் தேவையில்லை, முன் வரிசையில் அமர்ந்திருக்கிறார்களே அந்த 10 அமைச்சர்களின் பெயர்களைச் சொல்லிவிடுங்கள் பார்ப்போம்.

யாருக்குமே தெரியாது. எப்படித் தெரியும்? அந்தந்தத் துறைக்குக் கேள்வி கேட்டால் அந்தந்தத் துறை அமைச்சர் பதில் சொன்னால், 'ஓ இவர்தான் அமைச்சரா, ஓ இவர்தான் சட்டத்துறை அமைச்சரா, ஓ இவர்தான் பொதுப்பணித்துறை அமைச்சரா' என்று பதில் சொன்னால் நமக்குத் தெரியும்.

பொதுப்பணித்துறை அமைச்சரிடம் கேள்வி கேட்டால், சட்டத்துறை அமைச்சர் பேசுகிறார். ஒரு நாள் முழுமையாக ஓர் அரை மணி நேரம் விவாதம் நடந்தது, தேனி மாவட்டத்தில் வனத்துறை சம்பந்தமாக ஒரு பிரச்சினை. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறோம், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் விவாதம் செல்கிறது. அதற்குப் பொதுப்பணித் துறை அமைச்சர், சட்டத்துறை அமைச்சர் பேசுகிறார்கள்; வழக்கம் போல முதலமைச்சர் வாயைத் திறக்க மாட்டார், அவருக்கு என்னவென்றே தெரியாது அங்கு. நாங்களும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

திடீரென்று ஒருவர் எழுந்து சம்பந்தமே இல்லாமல் பேசுகிறார். அதாவது நாங்கள் எதற்குக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தோமோ, தேனி மாவட்டத்தில் வனத்துறை சம்பந்தமாக ஒரு பிரச்சினை, மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்த விவாதமே முடிந்துவிட்டது, ஒரு மணி நேரம் முடிந்துவிட்டது. முடிந்து வேறு தலைப்பிற்குச் சென்றுவிட்டோம். அப்போது சம்பந்தமே இல்லாமல் ஒருவர் இரண்டாவது வரிசையில் எழுந்து பேசுகிறார்.

நான் அப்போது நேரு அண்ணனிடம் கேட்கிறேன், 'இவர் யார் அண்ணே, இவர் ஏன் பேசுகிறார்?' என்று. அவர்தான் வனத்துறை அமைச்சர்' என்கிறார். நான் கேட்டேன், இவ்வளவு நேரம் வனத்துறை சம்பந்தமாக ஒரு மணி நேரம் விவாதம் நடந்தது, வாதங்கள் நடந்தன, இப்படி இருந்தால் எங்களுக்கு எப்படித் தெரியும், பார்க்கின்ற உங்களுக்கு எப்படித் தெரியும்?

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்பார்கள், மக்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்வார்கள், அதற்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர் பதில் சொல்வார்கள். பதில் சொன்னால், நாம் எதிர் கேள்வி கேட்கலாம். பேச்சுக்குப் பேச்சாக இருக்கும். பாட்டுப் பாடினால் நாங்கள் என்ன செய்வது? நான் அங்கேயே சொல்லிவிட்டேன், அதாவது இன்னொன்றையும் யோசித்துக் கொள்ளுங்கள், நீங்கள் அனைவரும் சபை நடவடிக்கைகளை நேரலையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், சரியா? அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பார்க்கிறார்கள்.

`பிக் பாஸ்' நிகழ்ச்சிக்குப் போட்டியாக இன்றைக்குச் சட்டமன்ற நிகழ்ச்சிகளை அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சொன்னேன், என்னுடைய நண்பர் ஒருவர் கேட்டார், `சட்டமன்றம் முடிந்துவிட்டதா, காலையில் 9:30 மணிக்கு பொழுதுபோக்கு இல்லையே' என்று கேட்டார். ஆமாம், இப்போது காலையில் சட்டமன்றம் முடிந்துவிட்டது, தொலைக்காட்சியில் `பிக் பாஸ்' தொடங்கிவிட்டார்கள், தினந்தோறும் மாலையில் அதைப் பாருங்கள் என்று கூறினேன். அந்த அளவிற்குச் சட்டமன்றத்தின் மாண்பை இன்றைக்கு இந்த அரசு கெடுத்து வைத்திருக்கிறது.

எந்தத் துறை சம்பந்தமாக எந்தக் கேள்வி கேட்டாலும் அந்தத் துறை அமைச்சர்கள் பதில் சொல்வது கிடையாது. நான் அவையிலேயே பதிவு செய்து வைத்திருக்கிறேன். பொதுவாக சபாநாயகர் என்ன செய்வார்? எதிர்க்கட்சிகள் நிறைய குறைகள் சொல்வார்கள், ஆளுங்கட்சி பதில் சொல்வார்கள். எதிர்க்கட்சிகள் குறைகள் சொல்லும்போதுதான் சில வார்த்தைகள், தேவையில்லாத வார்த்தைகள் வரும்போது, பொய்க் குற்றச்சாட்டுகள், தவறான குற்றச்சாட்டுகள் வரும்போது, சபாநாயகர் குறுக்கிட்டு என்ன சொல்வார், 'அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறோம்' என்பார்கள்.

அப்படி நீக்கும்போது கூட நாம் எழுந்து வாதிடலாம். 'நான் என்ன தவறாகச் சொல்லிவிட்டேன், என்ன வார்த்தை தவறாகச் சொல்லிவிட்டேன், சரி, அந்த வார்த்தைக்குப் பதிலாக இதைச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறலாம். ஏனெனில், அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது என்பது ஒரு பெரிய அவமானம் போன்றது. நாம் பேசுவதை நீக்கிவிட்டார்கள் என்பது ஒரு பெரிய அவமானம்.

அப்படித்தான் எல்லா அரசுகளிலும் நடக்கும், எல்லா ஆட்சிகளிலும் அப்படித்தான் நடக்கும். ஆனால், இங்கு என்ன நடக்கிறது தெரியுமா?

### இப்படி ஓர் அவலம் நடந்தது கிடையாது!

வரலாற்றிலேயே முதல் முறையாக அவைக் குறிப்பிலேயே நான் பதிவு செய்திருக்கிறேன்; சபாநாயகர் அவர்களே, எந்த ஆட்சியிலும் இப்படி ஓர் அவலம் நடந்தது கிடையாது. முதன்முறையாக ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதையும், முதன்முறையாக அமைச்சர்கள் பேசுவதையும் நீங்கள் இவ்வளவு நீக்கியிருக்கிறீர்கள்; வரலாற்றிலேயே இதுதான் அதிகம், இந்தச் சாதனை இந்த அரசுக்கு உண்டு என்று நான் சொன்னேன். அதற்கும் சபாநாயகர் 'நன்றி' என்று கூறிவிட்டார். அதைவிட மோசம் என்ன தெரியுமா? அமைச்சர்கள் பேசுவதை நீக்க வாய்ப்பே கிடையாது, நீக்க மாட்டார்கள். இப்போது இருக்கின்ற அமைச்சர்கள் எல்லாம் பேசுகிறார்கள்; பேசிவிட்டு சபாநாயகர் நீக்குவதற்கு முன்னரே அவர்களாகவே, 'இல்லை, நீக்கிக் கொள்ளுங்கள், நீக்கிக் கொள்ளுங்கள்' என்கிறார்கள். இதற்கு எதற்கு ஒரு சபை, இதற்கு எதற்கு ஓர் அவைக் குறிப்பு? ஆக இப்படித்தான் இன்றைக்குச் சட்டமன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட சட்டமன்றத்தில்தான் எனக்கு ஒரு துணையாக, எனக்கு ஒரு கேடயமாக நீங்கள் சகோதரர் பரந்தாமன் அவர்களை வெற்றிபெற வைத்து அனுப்பி வைக்கவேண்டும். ஏற்கனவே ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டவர், வழக்கறிஞர், எல்லாவற்றையும் விட முக்கியமாகச் செய்தியாளர் சந்திப்பில் எப்படிப் பதில் சொல்வார் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும்.

ஒரு நாள் சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஓர் அறிவிப்பு வெளியிடுகிறார். அன்றைக்குத்தான் `அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கார் கொடுக்கப் போகிறோம்' என்றார். நாங்கள் அமர்ந்திருந்தோம். ஓர் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் எழுந்து பேசுகிறார், நீங்களெல்லாம் பார்த்திருப்பீர்கள். 'அண்ணே, நான் வேலை இல்லாமல் இருந்தேன், எனக்கு வேலை போட்டுக் கொடுத்துவிட்டீர்கள். நான் வீடு இல்லாமல் இருந்தேன், எனக்கு வீடு வாங்கிக் கொடுத்துவிட்டீர்கள். கார் இல்லாமல் இருந்தேன், எனக்கு இப்போது காரும் கொடுத்துவிட்டீர்கள். எனக்குக் காதல் தோல்வி ஆகிவிட்டது' என்கிறார். நான் ஒரு நிமிடம் அப்படியே அதிர்ந்து போய்விட்டேன். தெரியவில்லை, முதலமைச்சர் இதெல்லாம் கூடச் செய்வார் போலும் என்று.

இதெல்லாம் மாற்றமா? இதற்கு மீண்டும் ஒரு முறையா? நாங்கள் அங்கு அவ்வளவு பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம், நீங்கள் மீண்டும் ஒரு முறை கேட்கிறீர்கள். இதையெல்லாம் தயவுசெய்து நீங்கள் உணர்ந்து, இவ்வளவு மோசமாகச் சென்று கொண்டிருக்கிறது சட்டமன்றம் என்பதை மக்களிடம் எடுத்துச் சென்று சேருங்கள். இப்படி நடந்தது கிடையாது சட்டமன்றம். இப்போது இருக்கின்ற ஒரு தலைமுறை, 'ஓ, சட்டமன்றம் இப்படித்தான் இயங்குமோ' என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நடந்தது கிடையாது, மக்கள் பிரச்சினைகளைப் பேசியிருக்கிறோம்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார், 'எங்களுக்கு இங்குப் பின்னாலிருந்து முதலமைச்சரின் முகம் தெரியவில்லை, எங்களுக்கெல்லாம் தெரியும் வகையில் தொலைக்காட்சித் திரை வையுங்கள்' என்று. நான் கூறினேன், 'நாங்கள் வேண்டுமானால் எழுந்து சென்றுவிடுகிறோம், நீங்கள் வேண்டுமானால் இங்கு வந்து அமர்ந்து கொள்ளுங்கள் எதிர்க்கட்சி வரிசையில், எங்களால் இங்கு அமர முடியவில்லை' என்று. அவர் அப்படியே பேசி கிழிச்சிடுறார், அவரைப் பார்க்க வேண்டும் நீங்கள். சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுவது, வெறும் ஆக்சன். திரைப் படப் படப்பிடிப்பில் எப்படி இருந்தாரோ, சினிமாவில் நடித்ததைவிட இப்போது நன்றாக நடிக்கிறார். எனக்கு அவர் பழைய நண்பர்தான்.

அதுவும் சில அமைச்சர்களை வைத்திருக்கிறார்கள். வெறும் பொய்யை மட்டுமே பேசி, வெறும் திசைதிருப்பும் தந்திரங்கள். நான் யார், சங்கி அமைச்சர் ஒருவர் இருக்கிறார். நீங்கள் எதற்காகப் பரந்தாமனை வெற்றி பெற வைத்து அனுப்புகிறீர்களோ இல்லையோ, இந்த சங்கி அமைச்சரைச் சமாளிப்பதற்காகவாவது நம் சகோதரர் பரந்தாமன் அவர்களை வெற்றி பெற வைத்து இங்கு அனுப்ப வேண்டும். மதுராந்தகத்தின் குரலாக, உங்களுக்காக உழைப்பதற்காக இந்தத் தொகுதியின் குரலாகத் திரு.பரந்தாமன் அவர்களை நீங்கள் வெற்றி பெற வைத்து அனுப்ப வேண்டும்.


> நம் தலைவர் முதலமைச்சராக இருந்த போது, தமிழ்நாட்டில் ஒரு 'ரியல் ஆட்சி' நடந்தது; ஆனால் இன்றைக்கு ஒரு 'ரீல்ஸ் ஆட்சி'யை இந்த முதலமைச்சர் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார். ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், நம் மீது பழியைப் போட்டார்கள், இன்னும் அவர்கள் நம்பவில்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்ற நம்பிக்கை இன்னும் அவர்களுக்கே வரவில்லை. அதனால்தான் இன்றைக்கும் நம் மீது பழி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.


அமைச்சர்கள் இப்படி என்றால் முதலமைச்சர் வேறு நிலை செயல்பாடு. இந்தியாவிலேயே, உலகத்திலேயே எந்த முதலமைச்சரும் இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்டதே கிடையாது. காவல்துறை மானியக் கோரிக்கையில் நான் பேசுகிறேன், கிட்டத்தட்ட 32 நிமிடங்கள் பேசினேன். எந்த அவதூறுக் குற்றச்சாட்டும் கிடையாது, ஒவ்வொன்றையும் ஆதாரத்தோடு வைத்தேன். எவ்வளவு குற்றங்கள் நடந்திருக்கின்றன, எவ்வளவு பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன, போதைப்பொருள் கலாச்சாரம் எப்படி இருக்கிறது, எங்கள் மீது மட்டும் வழக்கு போடுகிறீர்களே, எங்களுக்கு வந்தால் மட்டும் இரத்தமா, மற்றவர்களுக்கெல்லாம் வந்தால் தக்காளி சட்னியா?

பெண்களைத் தவறாகப் பேசிவிட்டார் என்று எங்கள் மீது, எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய எங்கள் தலைவர்கள் மீது, முன்னாள் அமைச்சர்கள், இளம் தலைமுறை இளைஞர்கள், நம் இளம் பேச்சாளர்கள் அனைவர் மீதும் வழக்கு. நான் ஒன்றே ஒன்று கேட்டேன், 'பா.ஜ.க. தலைவர்கள் இன்னும் வெளிப்படையாகப் பேசுகிறார்களே, இன்னும் சொல்லப்போனால் உங்களை மனம் திறந்து பாராட்டுகிறார்களே, ஏன் அவர்கள் மீது மட்டும் உங்களுடைய பார்வை பட மறுக்கிறது?' என்று. அதற்கெல்லாம் எந்தப் பதிலும் கிடையாது. 16 கேள்விகள் கேட்டேன். எல்லாவற்றையும் பேசிவிட்டு என்ன சொன்னேன், நிபந்தனை விதித்துவிட்டேன். தயவுசெய்து முதலமைச்சர் அவர்களே, மூன்று நாட்கள் அவகாசம் இருக்கிறது, சென்று ஆயத்தமாகிவிட்டு வாருங்கள் என்று கூறினேன்.

### அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது!

உடனே சபாநாயகர், 'அதெல்லாம் அவர் தயாராகிவிட்டுத்தான் வருவார்' என்றார். 'அதைத்தான் நானும் சொன்னேன், அவர் தயாராகிவிட்டுத்தான் வருவார். அவைத் தலைவர், நான் ஆங்கிலத்தில் சொல்கிறேன், நீங்கள் தமிழில் சொல்கிறீர்கள், அவ்வளவுதானே' என்றேன். அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

தயாராகிவிட்டு வாருங்கள், அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள், எல்லாம் எழுதிக் கொடுப்பார்கள். 'அவர்தான் தயாராக வந்திருக்கிறாரா, அப்படியென்றால் இப்போதே பதில் சொல்லச் சொல்லுங்கள்' என்றேன். 'இல்லை இல்லை' என்று உடனே முதலமைச்சர் எழுந்து, 'இங்கே பாருங்கள், நான் எல்லாரும் கேட்கின்ற கேள்விக்குப் பதில் சொல்வேன், யாரும் இங்கிருந்து எழுந்து சென்றுவிடக் கூடாது, சரியா, வரட்டுமா' என்று கூறி அவர் ஓடிப் போய் விட்டார்.

நான் கூட எழுந்து ஏதோ பதில் சொல்லப் போகிறார் போலும், சரி நாம் கேட்ட கேள்விக்கு ஏதோ பதில் வைத்திருக்கிறார் என்று சொல்லுவார் என்று பார்த்தால், கீழே குனிந்து மேலே பார்ப்பதற்குள் ஆளையே காணோம்.

சரி, மூன்று நாட்கள் கழித்து வருகிறார், ஏதேனும் தயாராகிவிட்டு வந்திருப்பார் என்று நினைத்தேன்.

நானும் பார்த்தால், எல்லாக் குறிப்புகளும் கிட்டத்தட்ட இரண்டு நாட்கள் என்னுடைய உதவியாளர்களை எல்லாம் வரவழைத்து, நம் ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் என்னென்ன குறைகள் சொல்லக்கூடும்,, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று குறிப்புகள் தயாரித்து வைத்திருந்தேன். ஐந்து ஆறு கேள்விகள் நம்மைக் கேட்டார்கள் என்றால், அவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்று நான் குறிப்பு எடுத்து வைத்திருந்தேன். ஆனால், சம்பந்தமே இல்லாமல் 50 வருடங்களுக்கு முன்னால் சென்று `சர்க்காரியா ஆணையம்', `மிசா'வில் என்ன நடந்தது என்று பேசினார். இப்படிப்பட்ட மிக மட்டமான, கீழ்த்தரமான ஓர் அரசியல்வாதியை இதுவரைக்கும் தமிழ்நாடு பார்த்ததே கிடையாது.

### ஆட்சிக்கு நாம் கொடுக்கப் போகின்ற முதல் அடி

அப்போதும் எழுந்து, 'முதலமைச்சர் முழுமையாகப் பேசி முடிக்கட்டும், கடைசியாக எனக்குப் பதில் சொல்ல அனுமதி கொடுங்கள்' என்று கேட்டேன். முதலில் `அனுமதி உண்டு' என்றார், பின்னர் ஒரு துண்டுச்சீட்டு வந்தது, சீட்டு வந்த உடனே `அனுமதி இல்லை' என்று கூறிவிட்டார். இப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட ஆட்சி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியை நாம் தொடர விடலாமா? இந்த ஆட்சிக்கு நாம் கொடுக்கப்போகின்ற முதல் அடி, இந்த இடைத்தேர்தலில் தாராபுரத்திலும், மதுராந்தகத்திலும் மிகப்பெரிய வெற்றியை நாம் பெற்றாக வேண்டும். அதைச் செய்து காட்டுவோமா, மாட்டோமா? அதை நிச்சயம் செய்து காட்ட வேண்டும்.

இன்றைக்கு முதலமைச்சர் பதவி ஏற்கின்ற நாளன்று என்ன சொன்னார்? அன்றைக்கும் இப்படித்தான் பெரிய அடுக்குமொழி வசனங்கள் எல்லாம் பேசி, ஆளுநர் சொல்லிவிட்டார், `என்ன வாசிக்க வேண்டுமோ அதைப் படியுங்கள்' என்று. கஜானாவை முழுமையாகத் துடைத்து வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள், சொன்னாரா இல்லையா? சுத்தமாகப் பணமே இல்லை என்று சொன்னாரா இல்லையா? இன்றைக்கு என்ன அறிவிப்பு கொடுத்திருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்னால்? அவர் வீட்டிற்கு அருகிலேயே 1,200 கோடி ரூபாயில் புதிய சட்டமன்றப் பேரவை அமைக்கப்படும் என்று. எங்கிருந்து வந்தது பணம்? இன்றைக்குப் பட்டினப்பாக்கத்தில் இருக்கக்கூடிய அனைத்து மீனவர்களும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் புதிய கார். யாராவது கேட்டோமா இப்போது? திராவிட முன்னேற்றக் கழகம், நம் தலைவர் சொல்லிவிட்டார், 'தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய கார் தேவையில்லை, முதலில் விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்யுங்கள். தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்' என்று.

நான் கேட்கிறேன், இப்போது மட்டும் கருவூலத்தில் எப்படிப் பணம் வந்தது? இந்த 120 நாட்களில் மட்டும் 40,000 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். நம்மைப் பார்த்து சொன்னார்கள் தி.மு.க. கருவூலத்தைக் காலி செய்துவிட்டது, கடன் அதிகமாக வாங்கிவிட்டார்கள் என்று. இன்றைக்கு இந்த 120 நாட்களில் மட்டும் எவ்வளவு? 40,000 கோடி கடன் வாங்கியிருக்கிறது இந்த அரசு. இப்படிப்பட்ட ஓர் அலங்கோலமான ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

மக்கள் இன்றைக்கு உணரத் தொடங்கிவிட்டார்கள். 'நாம் தவறு செய்துவிட்டோம், தி.மு.க.வை இழந்துவிட்டோம்' என்ற ஒரு வருத்தத்தில், மக்கள் இன்றைக்கு உணரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்து நீங்கள் பேசுங்கள். மதுராந்தகம் தொகுதியில் மொத்தம் 286 வாக்குச்சாவடிகள் இருக்கின்றன. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் சுமார் 250 வீடுகள் இருக்கும், 250 குடும்பங்கள் இருப்பார்கள். ஒவ்வொரு குடும்பத்தையும் இலக்காகக் கொண்டு பேசுங்கள். உங்களுக்குள் பிரித்துக் கொள்ளுங்கள், யார் யார் எந்த வீட்டிற்குப் பொறுப்பு என்பதைப் பிரித்துக் கொள்ளுங்கள். 117 கிளைச் செயலாளர்கள் இருக்கிறார்கள். கிளைச் செயலாளர்கள் ஆகிய உங்களுக்குத்தான் உங்களுடைய ஊரில், உங்களுடைய தெருவில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பது தெரியும். அந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னால், அந்த வாக்காளர்களின் நம்பிக்கையை நீங்கள் நிச்சயம் பெற முடியும். அவர்களை எல்லாம் சந்தித்துச் சொல்லுங்கள், தயவுசெய்து திரு.பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என்று நீங்கள் அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்துப் பேசுங்கள்.

நான் மீண்டும் சொல்கிறேன், உங்களுடைய தேர்தல் பணி மிக மிக முக்கியமானது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் நாம் வெற்றி வாய்ப்பை இழந்தோம். இருந்தாலும், 285 வாக்குச்சாவடிகளில் 67 வாக்குச்சாவடிகளில் திராவிட முன்னேற்றக் கழகமாகிய நாம் தான் முதலிடம் பெற்றிருக்கிறோம். 111 வாக்குச்சாவடிகளில், நாம் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறோம். அந்த 111 வாக்குச்சாவடிகளையும் இலக்காகக் கொண்டு அந்த வாக்காளர்களைச் சந்தியுங்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 132 வாக்குச்சாவடிகளிலும், இன்றைக்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சி 86 வாக்குச்சாவடிகளிலும் முதலிடம் வந்திருக்கிறார்கள். எனவே, அந்த 218 வாக்குச்சாவடிகளிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டும். நிச்சயம் அந்த வாக்குச்சாவடிகளில் நாம் சென்று நம் பிரச்சாரம் இன்னும் சிறப்பாக, தீவிரமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்துப் பேசுங்கள்.

### வீட்டில் முதலில் அரசியல் பேசுங்கள்!

நம் ஆட்சியில் என்னென்ன திட்டங்களை எல்லாம் நம் தலைவர் கொண்டுவந்தார் என்பதை நினைவூட்டுங்கள். நாம் இந்நேரம் ஆட்சிக்கு வந்திருந்தால், நம் தலைவர் மகளிர் உரிமைத் தொகையை வாக்குறுதியில் சொன்னபடி 1,000-லிருந்து 2,000-ஆக உயர்த்திக் கொடுத்திருப்பார் என்பதை நினைவூட்டுங்கள். இவர்கள் சொன்னார்களே, ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் என்ன சொன்னார்கள்? 2,500 என்று சொன்னார்களே, கொடுத்தார்களா? ஆனால், நம் தலைவர் சொன்னால் நிச்சயம் செய்திருப்பார். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு வீட்டிற்கும் 8,000 ரூபாய் கூப்பன் கொடுப்பேன் என்று கூறினார். நிச்சயம் நம் தலைவர் அவர்கள் இதையெல்லாம் செய்து கொடுத்திருப்பார்.

இது ஒவ்வொரு பிரச்சினையும் உங்களுக்குத் தெரியும், நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இவற்றையெல்லாம் மக்களுக்கு நினைவூட்டுங்கள், புரியவையுங்கள். நம் ஆட்சியில் நம் தலைவர் கொண்டுவந்த திட்டங்களால் நிச்சயம் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி நிச்சயம் இருப்பார். அதையெல்லாம் நியாபகப் படுத்தி பேசுங்கள்.

மற்றவர்கள் வீட்டில் எல்லாம் சென்று பேசுவதற்கு முன்னால், நம் கழக நிர்வாகிகள், நம் கட்சியினர், இளைஞர் அணித் தம்பிமார்கள், நிர்வாகிகள் உங்களுடைய வீட்டில் முதலில் தயவுசெய்து பேசுங்கள். கடந்த முறை நாம் செய்த தவறு, மிகப்பெரிய தவறு அதுதான். இந்த அரசாங்கம் இந்த நான்கு மாதங்களில் என்னென்னவெல்லாம் தவறாகச் செய்திருக்கிறார்கள் என்று ஞாபகப் படுத்துங்கள்.

நம் வீட்டில் முதலில் அரசியல் பேச வேண்டும். நம் குடும்பத்தினர், நம் சகோதர சகோதரிகள் ஆகியோரிடம் முதலில் இந்த ஆட்சியில் என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை நினைவூட்டுங்கள். இடைத்தேர்தல்தானே என்று தயவுசெய்து அலட்சியமாக இருந்துவிடாதீர்கள். இந்த இடைத்தேர்தல் வெற்றிதான் அடுத்து மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கப்போகின்ற வெற்றி; இந்த இடைத்தேர்தலின் வெற்றி. இந்த இடைத்தேர்தல் வெற்றி அதற்கு அடித்தளமாக இருக்கும்.

கடந்த தேர்தல் முடிவுகளைச் சற்று யோசித்துப் பார்த்து உங்களுடைய தேர்தல் பணிகளை அமைத்துக் கொள்ளுங்கள். நமக்குள்ளே நிச்சயம் சிறிய சிறிய வருத்தங்கள் இருக்கும், சிறிய சிறிய சங்கடங்கள் இருக்கும். அவற்றையெல்லாம் அப்படியே தொடர்ந்து கொண்டிருந்தோம் என்றால், 2026 தேர்தலில் முடிவு என்ன வந்ததோ அதே முடிவுதான் மீண்டும் வரும். அதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். தேர்தல் முடிவுகள் வரும் வரைக்கும் அந்தச் சிறிய சிறிய வருத்தங்களை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு, நம் இலக்கு ஒன்றே ஒன்றுதான் - உதயசூரியன் வெற்றி, பரந்தாமனின் வெற்றி, மதுராந்தகம் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரே இலக்கோடு பணியாற்றுங்கள்.

### நிச்சயம் எந்த அலையும் கிடையாது

நம் திராவிட முன்னேற்றக் கழகம் பவள விழாவைத் தாண்டி இன்றைக்கு 78-வது ஆண்டில் நாம் இருக்கிறோம். கலைஞர் கட்டிக்காத்த கட்சி, நம் தலைவர் அவர்களால் வழிநடத்தப்படுகின்ற ஒரு மிகப்பெரிய இயக்கம். நாம் நேற்று பெய்த மழையில் முளைத்த காளான்களிடம் மீண்டும் தோற்றுவிடக் கூடாது.

இந்த சோஃபா கோஷ்டி செய்கின்ற கூத்துக்கெல்லாம் திரும்பப் பதிலடி தருகின்ற தேர்தல்தான் வருகின்ற இடைத்தேர்தல். இது வெறும் வெற்றி தோல்விக்கான பிரச்சினை கிடையாது; இது கழகத்தினுடைய உடன்பிறப்புகளின் உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினை. சிலர் சொல்லலாம், 'இன்னும் அலை இருக்கிறது, மிகப்பெரிய அலை இருக்கிறது, அது இருக்கிறது' என்று நம் மனதை மாற்றலாம். அப்படியெல்லாம் நிச்சயம் எந்த அலையும் கிடையாது. அவர்கள் வெற்றி பெற்றதே வெறும் 107 தொகுதிகளில் தான்.

பெருந்தலைவர் காமராஜர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., அம்மையார் ஜெயலலிதா என்று பெரிய பெரிய சுனாமிகளையே பார்த்தவர்கள்தான் நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள். அப்பொழுதெல்லாம் அதையெல்லாம் கடந்து மீண்டும் நாம் வந்தோம், மீண்டும் நாம் வருவோம்.

அதேபோல நம் தலைவர் கலைஞருக்குப் பின்னால் தி.மு.க. காணாமல் போய்விட்டது என்று கூறினார்கள். ஆனால் நம் கழகத் தலைவரின் தலைமையில் இதுவரைக்கும் கிட்டத்தட்ட பத்து தேர்தல்களில் தொடர்ந்து வென்று காட்டியிருக்கிறோம். ஆகவே, இப்போது மீண்டும் ஒரு சிறிய பின்னடைவுதான், ஒரு சிறிய பின்னடைவை அடைந்திருக்கிறோம். திரும்பவும் நாம் மீண்டு வந்து முன்னிலைக்கு வருவோம். மிகப்பெரிய வெற்றியை இந்த இடைத்தேர்தலில் பெறுவோம்.

என்றைக்கும் உறுதியோடு களத்தில் மக்களோடு நாம் நிற்போம். தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால், எப்போதுமே தி.மு.க. - எதிர் மற்றவர்கள் என்றுதான் வரும். நம்மை எதிர்த்து யார் நிற்கிறார்களோ, நம்மை எதிர்த்து யார் களம் காண்கிறார்களோ அவர்கள் தான் மாறிக்கொண்டே இருக்கிறார்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே நிலையாக, வலிமையாகத்தான் இருக்கும்.

ஆகவே, நீங்கள் ஒவ்வொருவரும் திட்டமிட்டு உழைத்தீர்கள் என்றால், நிச்சயம் நாம் மிகப்பெரிய வெற்றியைப் பெற முடியும். களத்தில் இறங்கி, எந்த அளவிற்குப் பணியாற்றுகிறீர்களோ, அதே அளவிற்குச் சமூக ஊடகங்களிலும் பணியாற்றுங்கள். குறிப்பாக, இளைஞர் அணியின் பணி மிகச் சிறப்பாக அமைய வேண்டும். அதற்காகத்தான் மதுராந்தகத்தில் மாநில துணைச் செயலாளர்கள் ஐந்து பேரை நாம் இன்றைக்குத் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தியிருக்கிறோம். ஒரு மாநில துணைச் செயலாளருக்குச் சுமார் 60 வாக்குச்சாவடிகள் அவர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. எனவே உங்களுடைய பணிகளை எல்லாம் சரியாகப் பிரித்துப் பொறுப்பேற்றுக் கொண்டு உங்களுடைய பணிகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

இளைஞர் அணி மூலம் அடையாளம் காணப்பட்ட கிட்டத்தட்ட 70 இளம்பேச்சாளர்களும் மதுராந்தகம் தொகுதியில் தங்களுடைய தேர்தல் பணிகளைச் செய்ய இருக்கிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்தி, ஒருங்கிணைத்து அவர்களின் பணிகளையும் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுங்கள். இளம் தலைமுறை இளைஞர்களிடம் நம் அரசியலை, இப்போது இருக்கக்கூடிய அரசியல் நிலைமையைப் புரியவையுங்கள். வழக்கமான தேர்தல் பிரச்சாரமாக இல்லாமல் இயல்பாக ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று அமர்ந்து திண்ணைப் பிரச்சாரமாக நம் பிரச்சாரத்தை அமைத்துக் கொள்ளுங்கள். வாட்ஸ்-அப் குழுக்கள், இன்ஸ்டாகிராம் பக்கங்களை உருவாக்கி அவற்றிலும் நம் பிரச்சாரத்தை முன்னெடுங்கள்.

### மாற்றத்திற்கான தொடக்கம்

இந்த நேரத்தில் மாவட்டக் கழகத்துக்கு ஓர் அன்பு வேண்டுகோள்: எங்களுடைய இளைஞர் அணி நிர்வாகிகள், தம்பிமார்கள், இளம் பேச்சாளர்கள் நாங்கள் அனைவரும் கழகத்திற்காக, இந்த வெற்றிக்காக உழைக்கத் தயாராக இருக்கின்றோம். அவர்களை நல்ல முறையில் மாவட்டக் கழகமாகிய நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள், அவர்களைச் சரியாக வழிநடத்துங்கள். அவர்களுக்கு எந்தவிதமான ஒரு கட்டுப்பாடும் விதிக்காமல் சுதந்திரமாகத் தேர்தல் பணியைச் செய்ய விடுங்கள் என்று நான் இளைஞர் அணி சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் திட்டமிட்டு எந்தவித அகந்தையும் பார்க்காமல் நுட்பமான அளவில் இறங்கிப் பணியாற்றினோம் என்றால் நிச்சயம் மதுராந்தகத்தில் நாம் வெற்றி பெறப்போவது உறுதி. ஒன்றே ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நம்மை எதிர்த்து நிற்கின்ற வேட்பாளருக்கு வாக்களித்தால், அவர்கள் நூற்றில் ஒருவராகத் தான் இருப்பார்கள். ஆனால் பரந்தாமன் வென்றால், உங்களில் ஒருவராக, மக்களோடு ஒருவராக நிச்சயம் இருப்பார். எனவே உங்களுடைய பணிகளுக்குத் தலைவர் அவர்களும் நானும் நாங்கள் அனைவரும் நிச்சயம் தோளோடு தோள் நிற்போம்.

விரைவில் தலைவர் அவர்களும் மதுராந்தகத்துக்குப் பிரச்சாரத்துக்கு வர இருக்கின்றார், உங்களை எல்லாம் சந்திக்க இருக்கின்றார்.

மிகுந்த நம்பிக்கையோடு தேர்தல் பணியைச் செய்யச் செல்லுங்கள். சகோதரர் பரந்தாமனின் வெற்றியை உறுதி செய்யுங்கள். நீங்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்திற்கான தொடக்கமாக வருகின்ற ஒன்பதாம் தேதி வருகின்ற இடைத்தேர்தல் முடிவு இருக்கும் என்று கூறி, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்டக் கழகத்துக்கும், வருகை தந்திருந்த அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகளுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிக்க உரையாற்றினார்.